RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s156

# மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் மீனாட்சியின் தனித்துவம்

**அ. ஆன்றோ பிரவீனா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது), நாகர்கோவில்-629001, தமிழ்நாடு, இந்தியா

# The Uniqueness of Meenakshi in Madurai Meenakshiyammai Pillai Tamil

**A. Anto Praveena** [a, *]

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), (Affiliated to Manonmaniam Sundaranar University), Nagercoil-629001, Tamil Nadu, India

* Corresponding Author:
a.antopraveena@gmail.com

Received: 30-06-2022
Revised: 12-10-2022
Accepted: 20-10-2022
Published: 09-12-2022

Check for updates

## ABSTRACT

Many works of literature have emerged between the Sangam period to the age of Nayakas. Especially, many short stories emerged during the period of Nayakas. The objectives of those short stories were associated with glorifying and highlighting the deeds of God, King, Philanthropists, Gurus, Patrons and saints. With a classification of over ninety-six kinds of short stories, the golden era of short stories continued from the 12th century A.D until the 19th century. Among the Pillai Tamil literary works, particularly in between Pen Pal Pillai Tamil books, Meenatchiammai Pillai Tamil writing is considered a masterpiece. This work in the form of short stories glorifies and sings praises considering Madurai Meenatchiammai as a child. The sole purpose of this book is to glorify the magnificence of Madurai Meenatchiammai. Likewise, this book gives special depiction of Madurai Meenatchiammai with Meenatchiammai Pillai Tamil praise songs, the significance of Madurai Meenatchiammai's different stages of life, distinguished commentaries, depicting the deities protecting Meenatchiammai and provides the best description of the glory of Madurai Meenatchiammai. In this note, on the title "The uniqueness of Meenatchiammai in Madurai Meenatchiammai Pillai Tamil" this essay provides the commentaries of Madurai Meenatchiammai with an explanation regarding the organization of Meenatchiammai Pillai Tamil including Meenatchiammai's significance, the special features of Gods, the journey of Meenatchiammai reaching Lord Shiva and regarding the significance of Pillai Tamil short stories.

**Keywords:** Pillai Tamil, Madurai Meenatchiammai, Sitrilakiyam, Madurai Nayakar

## முன்னுரை

மக்கள் வாழ்வியல் முறைகளைக் கூறுவது இலக்கியம் ஆகும். தமிழ்மொழி அருமையும், பெருமையும் வாய்ந்தது. தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்கும் போது காலத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப பற்பல இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. இலக்கியம் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்று வகைப்படுத்தப்படுகிறது. நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோன்றியது. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அச்சிற்றிலக்கியங்களில் ஒன்று மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் ஆகும். ஒரு கவிஞனின் படைப்பை நிர்ணயிப்பதில் வருணனைக்கு முக்கியப் பங்கு உண்டு. இக்கட்டுரையில் மதுரையின் சிறப்பு மீனாட்சியம்மை பற்றிய வர்ணனைகள் மற்றும் பெருமைகள் ஆகியவைக் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

## சிற்றிலக்கியம் விளக்கம்

தமிழ் மொழியில் அமைந்த இலக்கிய வகைகள் ஒன்றாகச் சிற்றிலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழில் நெடும் பாடல்களாக அமைந்த பிரபந்த வகைகளைச் சிற்றிலக்கியம் என்பர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகை உறுதிப்பொருள்களையும் உணர்த்தும் இலக்கியம் பேரிலக்கியம் ஆகும். சிற்றிலக்கியம் என்பது "உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து கற்பனை, தெய்வப் போற்றல், தனிமனிதப் போற்றல் முதலானவற்றிற்கு மிகுதியும் இடம் தருவன சிற்றிலக்கியங்கள்" ஆகும் (Backiamary, 2008). அளவில் சிறியதாயினும் பெரும் சுவையைத் தருவனவாக சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. "புலவர்கள் தெய்வத்தின் மீதும், வள்ளல்கள் மீதும், அருளையும், பொருளையும் பெறக்கருதிப் பாடிய சிறு நூல்கள் அனைத்தும் சிற்றிலக்கியம்" எனப்படுகின்றன எனப்படும் (Govindarasan, 2006).

## மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

மதுரையில் எழுந்தருளியுள்ள மீனாட்சியம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு குமர குருபரர் என்ற புலவரால் விஜயநகர பேரரசின் நாயக்க மன்னர் திருமலை நாயக்கர் முன்னிலையில் மீனாட்சியம்மன் கோவிலில் வைத்து பாடப்பட்டது. பொருள்நலம், கலைவளம் ஆகியவற்றால் சிறந்து விளங்கும் இந்நூலின் முதலில் விநாயகர் வணக்கம் இடம்பெற்றுள்ளது. காப்புப்பருவத்தில் திருமால், சிவபெருமான், சித்திவிநாயகக் கடவுள், முருகக்கடவுள், பிரமதேவர், தேவேந்திரன், திருமகள்கலைமகள், துர்க்கை, சத்தமாதர்கள் முப்பத்து மூவர் ஆகியோரிடம் பாட்டுடைத் தலைவியாகிய மீனாட்சியம்மையைக் காக்குமாறு பதினோரு பாடல்களில் குமரகுருபரர் வேண்டுகிறார். ஏனையதால், செங்கீரை முதலிய ஒன்பது பருவங்களில் பருவத்துக்குப் பத்து பாடல்கள் வீதம் தொண்ணூறு பாடல்கள் அருளப்பெற்றுள்ளன. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் மொத்தம்102 பாடல்கள் உள்ளன.

## மீனாட்சியம்மை பற்றிய வருணனைகள்

ஏதேனும் ஒரு பொருளையோ அல்லது ஒரு நிகழ்வையோ கற்பனை கலந்து கூறுவது வருணனை எனப்படும். "ஒன்றை விசாலமாக விளங்குகிற நிலையில் சொல்வது வருணிப்பு" ஒரு கதையைப் படிக்க படிக்க சுவையைக் கூட்டுகின்ற காரணியே வருணனை ஆகும் (Nadarasan, 2012)." புலன்களால் உணர்ந்தவற்றை அல்லது புலன்களின் வாயிலாக உணரும் புறக்காட்சிகளைச் சொற்களில் மொழி பெயர்த்துக் காட்டுவது வருணனை" ஒரு பொருளை உணர வைப்பதும் சுவைக்கவைப்பதும் வருணனை ஆகும் (Sundaramoorthy, 1994). ஒருபொருளை அது இன்னது எனக்குறிப்பிடுதல் என்ற நிலையில் இல்லாமல் விவரித்துச் சொல்லுவது வருணனை ஆகும். மீனாட்சியம்மையின் அழகு, கண், கூந்தல், பல், இடை, மார்பு போன்ற உறுப்புகள் சார்ந்த வருணனைகள் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் இடம் பெற்றுள்ளன "பெண்ணின் தோற்றத்தை வருணிப்பது நேர்த்தியான கலையின் உத்தியாகவும், இலக்கியச் சொல் நெறியாகவும் அமைந்துள்ளது". மீனாட்சியம்மையின் அழகு, கண், கூந்தல், பல், இடை, மார்பு போன்ற உறுப்புகள் சார்ந்த வருணனைகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் இடம் பெற்றுள்ளன (Nadarasan, 2012).

## கண்

கண் மனிதனுக்கு இன்றியமையாத உறுப்பாகும். விழி, அக்கு, அக்கி, அக்கம், சால், சக்கு, விலோசனம், திருக்கு, திட்டி, நோக்கம், நாட்டம், அம்பகம், பார்வை தாரை, ஆகியவை கண்ணை குறிக்கும் வேறு சொற்கள் ஆகும். இலக்கியங்கள் பல இடங்களில் பெண்ணின் கண்களை வருணிப்பதுண்டு. "கயல் போன்றகண்ணை உடையவள் என்றும், கெண்டைவிளியாள் என்றும்" பெண்களின் கண்களை இலக்கியத்தில் வர்ணித்துள்ளனர் (Angamuthu, 2006). கயல்மீனைப் போன்ற விளிகளை உடையவளாக மீனாட்சியம்மை மக்கள் முன் காட்சியளித்துள்ளாள். என்பதை,

“அங்கயல் கண்ணமுதை மங்கையர்க்கு அரசியை எம்”

பாடலில் இடம்பெற்றுள்ளது (Manickavasagam, 2008).

## கூந்தல்

பெண்ணிற்குப் பேரழகு தருவதாக கூந்தல் அமைகிறது. சங்க இலக்கியங்களில் கூந்தலின் வேறுபெயர்களாக அளகம், கூந்தல், பித்தை, முச்சி, ஓதி, கூழை, கதுப்பு, குழல் போன்றவை கூறப்படுகின்றன. அம்மையின் கூந்தலானது ஆற்றுமணல் போல் பரந்து விரிந்து கிடப்பதோடு அழகு சேர்ப்பதாக உள்ளது என்று கூந்தலை ஆற்றுமணலோடு வருணித்துள்ளார்.

“தகரம் ஒழுகியகுழலும்”

இப்பாடல் அடிமூலம் மீனாட்சியம்மையின் கூந்தலானது வாசச்சாந்து பூசி நறுமணத்துடன் காணப்பட்டது தெளிவாகிறது (Manickavasagam, 2008).

## பல்

பல் மனிதனின் உறுப்பில் முக்கிய அங்கமாகக் காணப்படுகிறது. ஆரோக்கியமான பற்களே ஆரோக்கியமான வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன என்கின்றது மருத்துவ உலகம். அதனைப் போல் பல்லின் பெருமையைப் 'பல்போனால் சொல் போச்சு' என்ற பழமொழி மூலம் அறியமுடிகிறது.

“நிலவுமிழ் தரள நகையும்”

இருளில் நிலவின் ஒளியானது வெளிச்சம் தருவது போல மீனாட்சியம்மையின் பற்கள், முத்துக்கள் வரிசையாகப் பதித்தது போன்று ஒளிவீசி மதுரை நகரை ஒளிமயம் ஆக்கியது. அம்மையின் பற்கள் நிலவின் ஒளி போன்று இருந்ததாக குமரகுருபரர் வருணித்துள்ளார் (Manickavasagam, 2008).

## இடை

பெண்ணின் அழகை எடுத்துக்காட்டும் ஒன்றாக இடை அமைந்துள்ளது. இலக்கியங்களில் “உடுக்கைபோல் இடை உடையாள்” என்று இடையழகு குறிப்பிடப்பட்டுள்ளது.

“மறுகிடை

தளரவளர்வதோர்செவ்விமுற்றாக்கன”

என்ற பாடலில் அமைந்துள்ளன (Manickavasagam, 2008).

மலைபோன்ற மென்மார்பகத்தின் பாரம் தாங்கமுடியாமல் அம்மையின் இடைமெலிந்து கொடி போன்று காணப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

## மார்பு

பெண்மை தன்மையை நிரூபிக்கும் உறுப்பாக மார்பு விளங்குகிறது. பெண்ணின் உடலை வருணிக்கிற போது அதிகம் கவனத்திற்குள்ளாவது மார்பகமேஆகும்.

“தனமும் மனன் உற எழுதி எழுதரு”

இப்பாடல் வரிகளின் மூலம் மீனாட்சியம்மையின் மார்பானது இளமை மாறாமல் மென்மையாக இருந்ததை அறியமுடிகிறது (Manickavasagam, 2008). இதனையே

“சில்சுணங்கு அணிந்த பல் பூன்மென்முலை”

அகநானூறு பாடல் எடுத்துரைக்கிறது (Puliyur Kesigan, 2008).

## மதுரை தலப்பெயர்கள்

தென்பாண்டி நாட்டின் சிறந்த ஆலயங்களில் ஒன்றாக மதுரை மீனாட்சியம்மன் கோவில் அமைந்துள்ளது. மதுரையம்பதி என்னும் இச்சிவத்திருத்தலம், தென்னிந்திய இரும்புப் பாதையில் அமைந்துள்ளது. “சிவபெருமான் தமது சடையில் சூடிய பிறையினிடத்துள்ள அமிர்தமாகிய மதுவை தெளித்து, நாகம் உமிழ்ந்த நஞ்சை நீக்கிப் புனிதமாக்கியதால் 'மதுரை' என்னும் பெயர் பெற்றது” மதுரை என்பது இத்தலத்தின் திருப்பெயராகவும், திருவாலவாய் என்பது திருக்கோயிலின் திருப்பெயராகவும் அமைந்துள்ளது (Meiyappan, 2009). ஆயினும் இத்தலத்திற்கு மதுரை, ஆலவாய்கடம்பவனம், நான்மாடக்கூடல், கன்னிபுரீசம், சிவராஜதானி, சிவநகரம், சீவன்முத்திபரம், சிவலோகம், துவாதசாந்தபுரம் முதலிய தலப் பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## ஆலவாய்

சிவபெருமானுக்கு அணிகலனாக இருந்த பாம்பு வட்டமாகத் தன் வாலை வாயாற் கௌவி எல்லையைக் காட்டியதால் 'ஆலவாய்' என்னும் திருப்பெயர் இத்திருத்தலத்துக்கு உண்டாயிற்று என்பதை

“அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த

அலவாய் ஆவதும் இதுவே”

இப்பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது (Manickavasagam, 2008).

## கடம்பவனம்

மதுரையம் பதியின் தலப்பெயர் கடம்பவனம் ஆகும். இக்கடம்பவனமே மதுரை, ஆலவாய், நான்மாடக்கூடல் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. மதுரை நான்மாடக்கூடலில் வளரும் இளம்பெண் யானை போல் அம்மை புவனேசுவரியே மக்களின் துயரைப் போக்கி அருள்பாவிக்கிறாள் என்பதை,

“மதுரையில்வளரும்மடப்பிடி

கொட்டுகசப்பாணி”

“ஆகத்ததாகக்கடம்பாவிக்குள்விளை

யாடுமொர்மாப்பிடியையே”

இப்பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது (Manickavasagam, 2008).

## நான்மாடக்கூடல்

மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழுமேகங்களையும் தடுக்கும் பொருட்டுப் பெருமான் தன் சடையினின்று விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடிக் காத்தமையால் 'நான்மாடக்கூடல்' என்றும் 'கூடல்' என்றும் திருப்பெயர்கள் உண்டாயின.

“வாடுவோர் தம்மை போற்ற வயங்கொளி மாடமாக்கண்

கூடரு மேக நான்கும் மாடமாக் கூடலாலே

நாடவ ரதிசயிப்ப நான்மாடக்கூடலென்று

கீடுடை நகர்க்கு நாம்ம எங்கணும் பிறங்கிற்றன்றே”

என்னும் வரிகள் மூலம் அறியமுடிகிறது. கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றும் நான்கையும் நான்கு மாடங்களாகக் குறிப்பிடுவர் (Meiyappan, 2009).

## மன்னனின் மகளாக மீனாட்சியம்மை

மதுரை மாநகரை ஆண்ட மலையத்துவப் பாண்டிய மன்னனின் பட்டத்தரசியான காஞ்சனமாலையை மணம் செய்து கொண்டார். இருவரும் குழந்தைச் செல்வம் வேண்டி ஒரு பெரிய யாகத்தைச் செய்தனர். யாககுண்டத்தில் இருந்து மூன்று வயதுடைய ஒரு பெண் குழந்தை மூன்று மார்புகளுடன் தோன்றியது. நாட்டை அரசாள ஆண்பிள்ளை வேண்டி யாகம் செய்தால் பெண்பிள்ளை வந்து தோன்றியதே அதுவும் விசித்திரமாக மூன்று மார்புகளுடன் தோன்றியதை மன்னனும் அவன் மனைவியும் வருந்தினர். அப்போது வானில் ஒரு குரல் கேட்டது. அது" மலையத்துவஜா உமையவளே உனக்குப் பெண்ணாகப் பிறந்திருக்கிறாள். ஓர் ஆண்பிள்ளைக்குரிய கடமைகள் அனைத்தையும் இப்பெண் செய்வாள். இவளுக்குக் கணவனாக வரப்போகிறவனைக் கண்டதும் மறையும்" என்று அசரீரி கூறி மறைந்தது (Manickavasagam, 2010).

மன்னன் இதை ஆண்டவன் கட்டளையாக ஏற்றுக்கொண்டு மீனாட்சி அங்கையற்கண்ணி என்று பெயரிட்டு வளர்த்தான் என்பதை,

"தென்னற்கும் எம்பொன்மலை மன்னர்க்கும் ஒரு செல்வி

செங்கீரை ஆடி அருளே"

என்னும் வரிகள் மூலம் அறியமுடிகிறது (Manickavasagam, 2008).

## மதுரையை காக்கும் மீனாட்சியம்மை

பச்சை மரகதப் பசுந்தோகையை உடைய மயில்களின் தோகைக் கண்கள் எவ்வாறு இமைக்காமல் இருக்கின்றனவோ, அதைப்போல் அம்மையின் கண்கள் இமைக்காமல் மதுரை மாநகரைக் காக்கின்றன என்றும், தேன் ஆறாய் ஓடிப்பாயும் மதுரை, குடிகொண்டிருக்கும் மரகதவல்லியே மக்களைக் காத்தருளினாள். இங்கு அம்மையின் சிலை முழுவதும் மரகத கல்லால் ஆனது

"கண்ணறா மரகதக் கற்றை கலாமஞ்ஞை"

தெண்நறா அருவிபாய் மதுரை மரகதவல்லி" (Manickavasagam, 2008)

## திருமகள் கலைமகளுக்குத் தலைவி மலைமகள்

திருப்பாற் கடலில் அரிதுயில் கொண்டிருக்கும் திருமாலின் மார்பில் குடிகொண்ட திருமகளுக்கும் இவ்வுலகைப் படைக்கும் நான்முகனுக்கு நிகராக வெண்ணிற தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகளுக்கும் தலைவியாகத் தெள்ளுத்தமிழ் பயிலும் நான்மாடக் கூடலில் இளமயில் போல் குடி கொண்டிருக்கும் மலைமகளே காணப்படுகிறாள் என்பதை,

"திருமகள் கலைமகள் தலைமகள் மலைமகள்"

"தெளி தமிழ் மதுரையில் வளருமொர் இளமயில்"

என்னும் வரிகள் மூலம் அறிய முடிகிறது (Manickavasagam, 2008).

## மரகத மாமயில்

கார்மேக வண்ணனின் தங்கையாகிய மீனாட்சி சிவபரம் பொருளின் உடலில் ஒரு பங்காய் இடப்பாகம் கொண்டிருப்பவள். பொன்மலையில் படர்ந்த பசுங்கொடிபோல் வீற்றிருப்பவளே தெள்ளுத் தமிழ்வளர்த்த சங்கத்தமிழ் மதுரையின் மரகத மாமயில் என்னும் திருப்பெயரில் உலகைக்காக்கும் உமையவள் மீனாட்சி ஆவாள்

“சங்கு கிடந்த தடங்கை நெடும் புயல்

தங்காய் பங்காய் ஓர்

தமனிய மலைபடர் கொடியென வடிவு”

“தெளிதமிழ் மதுரையில் வளமொர் இளமயில்”

மீனாட்சியம்மையின் திருமேனி பச்சை நிறமென்பதால் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் மீனாட்சியம்மன் சிலை மரகத கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ளது (Manickavasagam, 2008).

## மதுரை தலைவி

மேகக்கூட்டம் கடல்நீரைக் குடித்து அதன் உப்புத்தன்மையைப் போக்கி மேலே சென்று கற்பகப் பூஞ்சோலையைக் காத்து கங்கையை வளப்படுத்தி நிலவின் களங்கத்தையும் போக்கி வான் கடந்து சென்று அங்குள்ள கடல்நீரில் கலந்து வளப்படுத்துகிறது. அதுபோல மழைவளம் நிறைந்த மதுரையின் தலைவி அங்கயற்கண்ணியாகிய மீனாட்சி ஆவாள் என்பதை,

“ஓடும் படலை முகில் பாடலம்

உவர் நீத்த உவரி மேய்ந்து கரு

ஊறும் கமஞ்சூல் வயிறுடைய

உகைத்துக் கடவுள் கற்பகப்பூங்

காடும் தரங்கக் கங்கைநெடும்

சுழியுநீந்தி அழுது இறைக்கும்

கலை வெண்ம தியின் முயல் தடவிக்”

“அருள்சூல் கொண்ட அங்கயல் கண்” (Manickavasagam, 2008)

## மீன் ஆளும் மதுரை மீனாட்சி

பாண்டிய மன்னனின் கொடி மீன் சின்னமாகும். மதுரைத் தெய்வம் மீனாட்சி அம்மையாவாள். மீனாட்சி ஆளும் மதுரையில் நீரினுள் எவ்வாறு மீன்தூங்கும் போது கண்களை மூடாமல் திறந்து கொண்டே இருக்கின்றனவோ அதுபோல் அம்மை தன் கண்களை மூடாமல் மதுரை மாநகரையும் மக்களையும் காத்தருளுகிறாள்.

“புனலில்பொருகயலில்

பொழிவில்சுருள்புரிகுழலில்” (Manickavasagam, 2008)

## எட்டுத்திசை வென்ற தேவி

மதுரையை ஆண்டு வந்த மலையத்து வஜப் பாண்டிய மன்னனின் மகளாகப் பிறந்த தேவி திக் விஜயம் செய்து எட்டுத் திசையையும் வென்றாள் தேவியின் படைத்தலைவர்கள் பகைவர்களை அழிக்க தேவி சோமசுந்தரப் பெருமானை அடைந்து வெற்றித் திருமகளாய் அம்மை விளங்கியுள்ளார் என்பதை பாடல் வரிகள் விளக்குகிறது.

“எம்ஜயனைப் பார்த்தெதிர் அருவி அமர்பொரு”

தமிழோடு பிறந்து பைங்கிளி பைங்கிளி என்பது பொதுவாக பச்சை நிறமுள்ள கிளிகளையும், குறிப்பாக ஆரக்கிளிகளையும் குறிக்கும் (Manickavasagam, 2008). அத்துடன் அழகிய இளம்பெண்களையும்

குறிக்கும். அமுதம் ஒழுகும் குமுதமாய், வளமிக்க தாமரைமலர் போன்று கைகள் சிவக்க சப்பாணிகொட்டி மீனாட்சி தமிழோடு பிறந்ததாக கூறித் தமிழுக்கு சிறப்பு சேர்த்துள்ளனர்.

"பண்ணளிக்கும் குதலை அமுதொழுகுகுமுதப்

பசுந் தேறல் ஊறலாடும்

பைங்குழவி பெருவிரல் சுவைத்து நீ பருகிடப்

பைந்தேறல் ஊறு வண்ணகைத்"

"தமிழோடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்தகொடி

சப்பாணி கொட்டி அருளே" (Manickavasagam, 2008)

## பாண்டிய குலமாமணி

பூமியைப் பிளந்து கொண்டு வெளிப்படும் வேர்ப்பலாச் சுளைகளிலிருந்து பாயும் தேனாறு பெருகியோட செந்நெல்லும் கமுகும் செழித்து வளர முரசு முழங்க உலகம் முழுதாண்ட பாண்டிய குலமாமணியே மீனாட்சி அம்மை முத்தம் அருளினாள்.

"முரசதிர்கடிநகர்மதுரையில்வளர்கிளி

முத்தம்அளித்தருள

முழுதுலகுஉடையவொர்கவுரியர்குலமணி

முத்தம்அளித்தருளே"

என்னும் வரிகள் விளக்குகிறது (Manickavasagam, 2008).

## அருளும் பொருளும் அள்ளித்தருபவள்

அங்கயற்கண்ணி மீனாட்சியின் கடைக்கண் பார்வைபட்டால் செல்வங்கள் வந்துசேரும் தன்னை நாடிவரும் அடியார்களுக்கு திருமகளையும் (லட்சுமி) கலைமகளையும் (சரஸ்வதி) அருளினாள். அடியார்கள் பொருட்செல்வமும், ஞானச்செல்வமும் பெற்றுயர அம்மை அருள்செய்தாள் என்பதை,

"எழுதருபருதி

வளைத்த கடல் புவியில்

பொதுவற அடிமை செய்திடு வழி அடியார்

பொருட்டலர் வட்டணையில்"

என்னும் வரிகள் விளக்குகின்றன (Manickavasagam, 2008).

## தென்குமரி ஆண்ட மீனாட்சியம்மை

மீனாட்சி அம்மை திக் விஜயம் சென்ற போது முதலில் எதிர்த்துப் போரிட்ட சேரரும், சோழரும் பின்னர் அம்மையுடன் சேர்ந்து கொண்டு தேவர்களை எதிர்த்திட மீனாட்சி, அம்மை தேவருலகை வென்றார். பின்னர் இமயத்தின் எட்டுபக்க மலைகளையும் எட்டுத்திசைக்கும் காவல் எல்லைக் கல்லாக இருக்கச் செய்து புவிமண்டலம் முழுவதையும் காத்தருளினாள்.

"இமயம் தொடும் வளர் குலவெற்பு எட்டையும்

எல்லை கல்லினில் நிறீஇ

எண் திசையும் தனி கொண்டு புரந்து

வடாது கடற்றுறை தென்

குமரித் துறை என ஆடுமடப்பிடி”

இவற்றின் ஒரு எல்லையாக கன்னியாகுமரியில் அன்னை பகவதி கன்னியாக நின்று தவம் செய்து கொண்டிருக்கிறாள் (Baskara Thondaiman, 1999). என்பதை

“நீலத்திரைக்கடல் ஓரத்திலே - நின்று

நித்தம் தவம் செய்குமரி எல்லை”

என்னும் பாடல்வரிகள் விளக்குகிறது (Baskara Thondaiman, 1999).

## முடிவுரை

நாயக்கர்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களின் நோக்கம் இறைவன், அரசன், வள்ளல், ஆசான், அருளாளர், ஞானியர் ஆகியோரின் சிறப்பை எடுத்துரைப்பதாகும். மீனாட்சியம்மையானவள் கயல் போன்ற கண்களை உடையவள் என்றும், அம்மையின் கூந்தலானது ஆற்று மணல் போல் பரந்து விரிந்து கிடந்தன என்றும், இருளில் நிலாவின் ஒளியானது வெளிச்சம் தருவது போல மீனாட்சியம்மையின் பற்கள் ஒளிவீசுகிறது என்பதையும், இடை உடுக்கை போலும், மார்பு மலை போலும் மென்மை தன்மைமாறாமல் இருந்ததையும் அறிய முடிகிறது. தாம் கண்ட ஒரு காட்சியையோ, நிகழ்ச்சியையோ தம் கவிதையைப் படிப்போரும் உணரும்படிச் செய்ய கவிஞர்கள் மேற்கொள்ளும் ஓர் உத்தியே வருணனை ஆகும். மீனாட்சியம்மையைக் காக்க துணையாக நின்ற தேவர்கள் திருமால், சிவபெருமான், விநாயகப்பெருமான், முருகப்பெருமான், நான்முகன், தேவேந்திரன், திருமகள், கலைமகள், துர்க்கை, சப்தமாதர்கள் ஆகியோர்கள் காத்தருளினர். மேலும் பாண்டிய நாட்டின் பெருமைகள் சிறப்புகள் பற்றியும் தலப்பெயர் தலவரலாறுகள் பற்றியும் மீனாட்சியம்மையின் தனித்துவம் பற்றியும் இந்நூலில் இடம்பெறுவது தனிச்சிறப்பாகும்.

## References

Angamuthu, T.N. (2006) Semmozhi ilakkiyam sillapathigaram, Muththamil Pathippagam, Chennai, India.

Backiamary, F. (2014) Vagamai Nokkil Ilakkiya Varalaru, New Century Book House, Chennai, India.

Baskara Thondaiman, M. (1999) Madurai Meenashi, Kalaignar Pathippagam, Chennai, India.

Govindarasan, M. (2006) Ilakkiya Kalanjiyam, Amasaveni Pathippagam, Chennai, India.

Manickavasagam, G. (2008) Silapathikaram, Uma pathippagam, Chennai, India.

Manickavasagam, G. (2010) Mennashi Amman Pillai Tamil, Uma pathippagam, Chennai, India.

Meiyappan, S. (2009) Madurai Mennashi, Manivaasagar Pathippagam, Chennai, India.

Nadarasan, T.S. (2012) Tamil Alagiyal, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Puliyur Kesigan, (2008) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Sundaramoorthy, E. (1994) Nadaiyiyal Ilakkiyam Alumai valarchi, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License